

கோவையில் யானைவழித்தடத்தில் சென்ற பாஸ்கர் என்பவர் யானை தாக்கி காயம் அடைந்து உள்ளார். கால் இரண்டும் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் அவருக்கு சிறப்பு சிகிச்சை கொடுக்கப்பட்டு வருகிறது. தமிழக முதல்வர் உத்தரவின் பேரில் அவருக்கு நிவாரண தொகை வழங்க வந்துள்ளோம். யானை வழித்தடத்தில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. யானை மனித மோதல்களை தடுக்க துறை சார்ந்த அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.அதேபோல், வனப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். விரைவில், கோவை ,ஈரோடு பகுதியில் யானை மனித மோதல்களை தடுக்க வனத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தவுள்ளோம்.நிலச்சரிவு நடந்த வயநாடு பகுதியில் நிலைமை சரியான பிறகு, இன்னும் 10 நாளில் தமிழகத்திலிருந்து டெக்னிக்கல் துறை சார்ந்த அதிகாரிகள் அங்கு சென்று எதனால் இந்த நிலச்சரிவு ஏற்பட்டது என்பதை ஆராய இருக்கிறார்கள்.வயநாடு சம்பவத்தை உதாரணமாக வைத்து கொண்டு யானை வழிதடங்கள் நிலச்சரிவு பாதிக்கும் இடங்களை ஆராய்ந்து தமிழகத்தில் இது போன்ற சம்பவம் நடைபெறாமலும் மக்கள் பாதுகாக்க இருக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார்.இதில், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, அரசு மருத்துவமனை டீன் நிர்மலா, வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொஅ.ரவி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் அசோக் ஆறுக்குட்டி,தளபதி தியாகு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மாமன்னர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும், 7ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா நிறைவு நாள் விழாவில், கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 05.08.2024 அன்று பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். மாநகராட்சி மேயர் திருமதி. திலகவதி செந்தில் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன் மற்றும் அலுவலர்கள், விழா ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளனர்.

### ஏ.ஆர்.ராஜா ஏற்பாட்டில்

# குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. –எஸ்.செல்வமணி, எம்.அப்துல்மாலிக் – பஞ்சுகுமார் பங்கேற்பு!

*மயிலாடுதுறை. ஆக. 7 -*

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஆர். ராஜா ஏற்பாட்டில் அ.தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் அக் கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி கோமலில் நடைபெற்றது. .நிகழ்ச்சிக்கு குத்தாலம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா தலைமை தாங்கினார். ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் கோமல், கொழையூர், கொக்கூர், மாந்தை, எழுமகளூர், கோபராஜபுரம் ஆகிய ஊராட்சிகளில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சிகளை சேர்ந்த 143 பேர் பா.ம.க.வை சேர்ந்த ஒன்றிய குழு உறுப்பினர் டாக்டர் சிவக்குமார், பா.ம.க. மாவட்ட துணைத் தலைவர் கே.எஸ். குமார், பா.ம.க. மாவட்ட முன்னாள் தலைவரும், மாவட் டச் செயற்குழு உறுப்பினருமான எம்.பட்டாபிராமன், அ.தி.மு.க. ஒனறிய அம்மா பேரவை செயலாளர் எஸ்.ஆர். காமராஜ், ஆகியோர் தலைமையில் அக் கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்தவர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., இரு வண்ண கைத்தறி ஆடை அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டார். நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பஞ்சு.குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் வின்செண்ட், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் செளமியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகன், வரதராஜன், லெட்சுமிகாசிராஜன், பொருளாளர் தங்கராசு, மாவட்ட பிரதிநதிகள் ராஜசேகர், எம்.என் ரவிச்சந்திரன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் திவ்யாசரண்ராஜ், சிவஞான பால சுந்தரி, ராக்கெட்ரமேஷ், மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் மில்லர், ஓட்டுநர் அணி மதியழகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்தி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர். பாண்டியன், ,ஊராட்சி மன்ற தலைவர்கள் எழிரசி பாலசுப்பரமணியன், சித்திரா விஜய குமார், கணேஷ்குமார், விஜயா கண்ணன் மற்றும் துரைராஜ், இளங்கோ, நடராஜ், கலைகுமார், ஜ௺வா, வைத்தியநாதன், பிரபாகரான், ரவி, அரிச்சநிதிரன், மதியழகன், விஜயகாந்த், சரண்ராஜ், செந்தில்குமார் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்:

# ஈரோடு தெற்கு மாவட்டம் முழுவதும் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!



*ஈரோடு, ஆக. 7 -*

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:

தகைமைசால் தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசன கர்த்தாவாக, இலக்கியவாதியாக, திரைப்பட தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக, உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும் திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராக தமது பொதுவாழ்வை தொடங்கி, பின்னர் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பாசறையில் பயின்று, காஞ்சி தந்த காவியத்தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்ற கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவிற்கு பிறகு திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து. அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து, தமிழ்நாடு வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுங்கி கொண்ட முத்தமிழறிஞர் தமிழினதலைவர் கலைஞர் அவர்களின் 6வது ஆண்டு நினைவு நாளையொட்டி இன்று (7.8.2024 - புதன் கிழமை) காலை 8 மணியளவில் ஈரோடு பன்னீர் செல்வம் பூங்காவில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும், காலை 8.30 மணியளவில் முனிசிபல் காலனியில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கும் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளோம். அதனை தொடர்ந்து ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, வார்டு, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் அனைவரும் ஆங்காங்கே உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனவே இந்நிகழ்ச்சியில் ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பார்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் கழக தோழர்கள் அனைவரும் ஆங்காங்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடங்களில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குறிப்பு:** அனைத்து நிகழ்வுகளையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்திட வேண்டும்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



*தஞ்சாவூர், ஆக. 7 -*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் அமைதி பேரணி மற்றும் கலைஞர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (07.08.2024) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் தஞ்சை புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகம் தஞ்சை கலைஞர் அறிவாலயத்தில் அமைந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து திருவுருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற உள்ளது.

அதுசமயம் தலைமை கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னணியினர் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 வது நினைவு நாள்!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம் வேண்டுகோள்!

*புதுக்கோட்டை, ஆக. 7 -*

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஐம்பதாண்டு காலம் நமது கழகத்தின் தலைவராகவும், ஐந்து முறை தமிழ் நாட்டின் முதலமைச்சராகவும் உலகமெங்கும் வாழுகின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கு பாதுகாவலாகவும், இந்திய அரசியலில் தனக்கென்று தனி வரலாறு படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவு நாளையொட்டி "அமைதிப் பேரணி". ஆகஸ்ட் 7. புதன்கிழமை அன்று பேரறிஞர் அண்ணாசிலையில் இருந்து புறப்பட்டு கீழராஜவீதி வழியாக மாவட்ட தி.மு.க.அலுவலகம் பெரியண்ணன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது. அமைச்சர்கள், மாவட்ட செயலாளர், மாநில நிர்வாகிகள், முன்னாள் , இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர ஒன்றிய, பேரூர், கிளைக்கழக செயலாளர் கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உடன் பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ள உள்ள இந்த அமைதிப் பேரணியில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, கிளை மற்றும் வார்டு இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி உறுப்பினர்கள் முத்தமிழறிஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்த அனைவரும் அணி திரண்டு வாரீர்! என புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6வேது ஆண்டு நினைவு தினம்!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக அமைதிப் பேரணி - சிலைக்கு மாலை!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



*கிருஷ்ணகிரி, ஆக. 7 -*

தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த தமிழகத்தின் சிற்பி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுச் சென்று ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்து ஆறாவது ஆண்டு நினைவு தினம் வருகிற 07.08.2024 புதன் கிழமை அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளரும்,

பர்கூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் 07.08.2024 புதன்கிழமை காலை 0900 மணிக்கு கிருஷ்ணகிரி, பெங்களூர் சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகிலிருந்து அமைதி பேரணி சென்று ராயக்கோட்டை மேம்பாலம் அருகே அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப் பட உள்ளது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பஞ்சாயத்து தலைவர் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களது திரு உருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட கச்சிராயப்பாளையம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி கல்வித்துறை சார்பில், மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு தலைமையேற்று மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்,இதில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் இரா.முருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கீதா, மாவட்ட கல்வி அலுவலர் (இ.நி), கி.லதா,பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் ஆ.ஆறுமுகம்,பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் ஆர்.வெண்ணிலா, பள்ளி வளர்ச்சிக்குழு தலைவர் சின்னசாமிபிள்ளை, பேரூராட்சி மன்ற தலைவர் தா. பன்னீர்செல்வம், துணைத் தலைவர் இரா.தண்டபாணி, பட்டதாரி ஆசிரியர் வெ.சங்கர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக,பள்ளி மேலாண்மைக்குழு, பள்ளி வளர்ச்சிக்குழு பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள்,அரசு அதிகாரிகள்,துறை சார்ந்த அலுவலர்கள், ஆசிரியர் பெருமக்கள், மாணவிகள், பொதுமக்கள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட அனைவரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலப்பாக்கம் கு.சண்முகம்

### ஆகஸ்ட் 7 (2023)



1975ஆம் ஆண்டு ஆலப்பாக்கம் கிளைக் கழக பிரதிநிதியாகவும் பின்னர், கிளைச் செயலாளர், மூன்று முறை வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளர், மதுரவாயல் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு கழகப் பொறுப்புகள் வகித்து தனது பகுதியில் கழகம் வளர்த்தவர்.

2006ல் மதுரவாயல் நகர்மன்றத் தலைவராகவும், 2022ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி சுகாதார நிலைக்குழு உறுப்பினராகவும், சென்னை துறைமுக பொறுப்புக் கழக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

2023ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளன்று நடைபெற்ற அமைதி பேரணியில் கலந்து கொண்ட வழியிலேயே திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பில் மறைவெய்தியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**